செய்தி வெளியீடு எண். 309 நாள்.4.4.2010

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>மறைந்த பத்திரிகையாளர் குடும்பத்திற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி!</u>

# <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

**தமிழகத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருவோரின் நலன் கருதி, அவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிடுவார்களேயானால், அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்ச ரூபாயும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒன்றரை இலட்ச ரூபாயும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு இலட்ச ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நல நிதியுதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடும் புதிய திட்டம், 19.9.2006 முதல் இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.**

**இத்திட்டத்தின்படி, 'டாக்டர் நமது எம்.ஜி.ஆர்' நாளிதழில் கடலூர் மாவட்ட செய்தியாளராக 17 ஆண்டுகள் பணியாற்றி, 19.8.2007 அன்று இயற்கை எய்திய திரு பி.ராஜசேகரன் என்பவரின் மனைவி திருமதி ஆர்.சுமதி அவர்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை பத்திரிகையாளர் குடும்ப நலநிதி உதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று ( 4.4.2010) ஆணையிட்டுள்ளார்.**

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை–9.